செ.வெ.எண்: 612 நாள்: 11.10.2020

**காவிரி-வைகை-குண்டாறு இணைப்புத் திட்டம் நிறைவேற்றப்படும் பொழுது விவசாயிகளின் வாழ்வாதாரம் உயரும்.**

**மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் தகவல்.**

---

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் இன்று (11.10.2020) புதுக்கோட்டை மாவட்டத்தில் அம்மா நகரும் நியாய விலைக்கடை மற்றும் அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையங்களை துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், கந்தர்வக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் திரு.பா.ஆறுமுகம் அவர்கள் முன்னிலையில் நடைபெற்றது.

பின்னர் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்ததாவது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொதுமக்களின் முன்னேற்றத்திற்காக எண்ணற்ற நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். அந்த வகையில் பொதுமக்கள் தங்களது பகுதிகளிலேயே அத்தியாவசியப் பொருட்களை பெற்று பயன்பெறும் வகையில் அம்மா நகரும் நியாய விலைக்கடைகளை துவங்க தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது. அதனடிப்படையில் புதுக்கோட்டை மாவட்டம் முழுவதும் பல்வேறு பகுதிகளில் அம்மா நகரும் நியாய விலைக்கடைகள் துவங்கப்பட்டு வருகிறது.

இதன் ஒருபகுதியாக இன்றையதினம் புதுக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், எ.குளவாய்பட்டியில் அம்மா நகரும் நியாய விலைக்கடை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு துவக்கி வைக்கப்பட்டுள்ளது. கூழையான்விடுதி தாய் அங்காடியில் உள்ள 592 குடும்ப அட்டையில் இருந்து 130 குடும்ப அட்டைகளை பிரித்து எ.குளவாய்பட்டியில் இந்த நகரும் நியாய விலைக்கடை துவக்கி வைக்கப்பட்டுள்ளது. இதன் பயனாக 2 கி.மீ தூரம் சென்று பொருட்கள் பெற்று வந்த பொதுமக்கள் இனி தங்களது இருப்பிடங்களிலேயே அத்தியாவசியப் பொருட்களை பெற்று பயன்பெறலாம்.

மேலும் மணவிடுதி ஊராட்சி, கிடாரம்பட்டி மற்றும் கந்தர்வக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், நடுப்பட்டி ஊராட்சி, பருக்கைவிடுதி ஆகிய கிராமங்களில் அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் விவசாயிகள் பயன்பாட்டிற்கு துவக்கி வைக்கப்பட்டுள்ளது. விவசாயிகள் தாங்கள் உற்பத்தி செய்த நெல்லை இடைத்தரகர் இன்றி நேரடியாக அரசு நெல் கொள்முதல் நிலையத்தில் நல்ல விலைக்கு வழங்கி பயன்பெறலாம். இதனை விவசாயிகள் உரிய முறையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

புதுக்கோட்டை மாவட்ட விவசாயிகளின் பல ஆண்டு கால கனவு திட்டமான காவிரி-வைகை-குண்டாறு இணைப்புத் திட்டம் நிறைவேற்றப்பட உள்ளது. இத்திட்டம் நிறைவேற்றப்படும் பொழுது புதுக்கோட்டை மாவட்டம் செழிப்பான மாவட்டமாக மாறுவதுடன், விவசாயிகளின் வாழ்வாதாரம் உயரும். மேலும் இப்பகுதி பொதுமக்களின் அனைத்து கோரிக்கைகளும் நிறைவேற்ற உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

எனவே தமிழக அரசின் இதுபோன்ற நலத்திட்ட உதவிகளை பொதுமக்கள் உரிய முறையில் பெற்று பயன்பெற வேண்டும். இவ்வாறு மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் கூட்டுறவுத்துறை இணைப்பதிவாளர் எம்.உமாமகேஸ்வரி, மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் த.ஜெயலெட்சுமி, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழக துணை மேலாளர் ராமகுரு உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

**செய்தி வெளியீடு - செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை.**